செய்தி வெளியீடு எண் : 2247 நாள் : 09.11.2023

# மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

தமிழ் இதழியலின் மூத்த புகைப்படக்காரர் திரு.சு.குமரேசன் (வயது 56) அவர்கள் இன்று (09.11.2023) அதிகாலை மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் மனவருத்தம் அடைந்தேன். திரு.சு.குமரேசன் அவர்கள் 30 ஆண்டுகள் விகடன் குழுமத்தில் தலைமைப் புகைப்படக்காரராகப் பணியாற்றி, அரசியல், சினிமா, விளையாட்டு, கலை, இலக்கியம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பல்வேறு நிகழ்வுகளைப் பதிவு செய்த அனுபவம் கொண்டவர்.

திரு.சு.குமரேசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகைத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in